ஒரு ஹெக்டருக்குமேல் நிலம் தேவையென்றால் மரங்கள் வெட்ட அனுமதி பெறப்பட்ட பிறகுதான் அத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15 கிலோ மீட்டர் தொலைவிற்குத் தார்ச்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதனைக் கவனத்துடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
(பட்டியல்கள் 17 முதல் 22 வரை)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

வணிக வரி நிலுவை, சிறு வணிகர் நலன் காத்திட புதிய வரி நிலுவைத் தொகை சமாதான் திட்டம் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். (குறுக்கீடு) இதனை முடித்துவிட்டு, உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு பேரவை விதி 110–ன்கீழ் ஓர் அறிக்கையை இந்த அவையில் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள வணிகர், வணிகர் பெருமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும்,

@ 323 முதல் 855 வரையிலான பக்கங்களில் பாகம் 2-ல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

2023 அக்டோபர் 10] [திரு. மு.க. ஸ்டாலின்]
வணிக வரித் துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை மற்றும் மேல்முறையீடுகள் குறித்த பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு நல்ல வாய்ப்பாகவும், சிறு வணிகர்களின் நலன் காத்திடுவதற்கான மேலும், ஒரு முன்னோடி நடவடிக்கையாகவும், இந்த அரசு செயல்படுத்தவுள்ள 'புதிய வரி நிலுவைத் தொகை சமாதான் திட்டம்' பற்றிய அறிவிப்பை பேரவை விதி 110-ன்கீழ் வெளியிட விரும்புகின்றேன்.

தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக 2 இலட்சத்து 11 ஆயிரத்து 607 கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் சம்பந்தப்பட்ட வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 569. இவற்றில் நிலுவையாக உள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிக வரித் துறையின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, நமது வணிகர்களும் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய வருவாயும் பெருமளவில் நிலுவையாக உள்ளது.

இவற்றில் பெரும்பான்மையான வழக்குகள் தமிழ்நாடு வணிக வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள். மேற்கூறிய இரு முக்கிய சட்டங்கள் மற்றும் பல இதர சட்டங்களையும் உள்ளடக்கி, கடந்த 1-7-2017 முதல் நாடு முழுமைக்கும் ஜி.எஸ்.டி (GST) சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது, நடைமுறையில் இருந்து வருகிறது. இருந்தாலும், ஏற்கெனவே வழக்கத்திலிருந்த மேற்கூறிய வரிச் சட்டங்களின்கீழ் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியன இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன.

இந்த நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வணிகர்கள் நீண்ட நாட்களாக முன்வைத்து வருகிறார்கள். இந்தக் கோரிக்கைகளை கவனமுடன் பரிசீலித்து, இத்தகைய பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில் ஒரு சமாதான் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. கடந்த

ஆண்டுகளில் இந்த நிலுவைத் தொகைகள் குறித்து பல சமாதான் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இருந்தாலும், புதியதோர் அணுகுமுறையோடும், கூடுதல் சலுகைகளோடும் இந்தத் திட்டம் இப்போது வடிவமைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–10

இந்தத் திட்டத்தின்கீழ், வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு குறைவாக வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு இந்நிலுவைத் தொகையானது முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு இவ்வாறு முழுமையாக வரி நிலுவை தள்ளுபடி செய்யப்படுவது இதுதான் முதல் முறை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அரசின் இந்த முடிவால் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 398 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 95 ஆயிரத்து 502 சிறு வணிகர்கள் தமது நிலுவைத் தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்டு பலனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இப்படி நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்ட வணிகர்கள் தவிர இதர வணிகர்கள் மற்றும் நிறுவனங்கள் அனைவரும்—ரூபாய் ஐம்பதாயிரம் முதல் ரூபாய் பத்து இலட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் பத்து இலட்சம் முதல் ரூபாய் ஒரு கோடி வரை வரி நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் ஒரு கோடி முதல் ரூபாய் பத்து கோடி வரை நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் பத்து கோடிக்கு மேலாக நிலுவையில் உள்ளவர்கள் என நான்கு வரம்புகளின்கீழ் கொண்டு வரப்படுவர்.

மேற்கூறிய நான்கு வரம்புகளில் முதல் வரம்பில் உள்ளவர்கள் மொத்த நிலுவைத் தொகையில் 20 விழுக்காட்டைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம். அல்லது நிலுவையில் உள்ள வணிக வரி, வட்டி மற்றும் அபராதத் தொகையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுத் தொகையைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளி வரலாம்.

இதர மூன்று வரம்புகளில் உள்ள வணிகப் பெருமக்களும், நிலுவையில் உள்ள வணிக வரி, வட்டி மற்றும் அபராதத் தொகையில் குறிப்பிட்ட விழுக்காட்டைக் கட்டினால் நிலுவை

2023 அக்டோபர் 10] [திரு. மு.க. ஸ்டாலின்]

வழக்குகளில் இருந்து வெளிவரும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்களுள், வரி விதிப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களும், வரி விதிப்பை ஏற்றுக் கொள்ளாமல் மேல் முறையீடு செய்து இருப்பவர்களுக்கும் எனத் தனித்தனியாக நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் மேலும் ஒரு முக்கியச் சலுகையாக, நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் ஏற்றப்பட ஏதுவான திரண்ட வட்டித் தொகையும் (Accrued Interest) முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வணிகப் பெருமக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்தத் திட்டம், வரும் 16–10–2023 முதல் நடைமுறைக்கு வரும். நான்கு மாத காலம் நடைமுறையில் இருக்கும். அதாவது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி வரை இந்த சமாதான் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

அரசின் இத்தகைய முன்னோடி முயற்சியை முழுமையாக வணிகர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள வழக்குகளுக்குத் தீர்வு காண்பதோடு, தமிழ்நாடு அரசுக்குச் சேர வேண்டிய வருவாயையும் அளித்து, வணிகப் பெருமக்கள் மென்மேலும் தொழில் வளர்த்து வளம் பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

4. புதிய வரி நிலுவைத் தொகை சமாதான் திட்டம் குறித்த வணிக வரித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி தெரிவித்த பிறகு, நீங்கள் பேசலாம் இல்லையா? (குறுக்கீடு) பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஓரிரு வார்த்தைகளில் நன்றி தெரிவித்த பிறகு, உங்களுக்கு நான் பேச வாய்ப்புத் தருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள். ஓரிரு வார்த்தைகளில் நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்ளுங்கள்.